★ ★ ★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (17-11-66) இதழ் 277
பராபவ ஷ்பான் 3 கார்த்திகை 2 வியாழக்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இலங்கை-இந்தியா
ஒரு வருடம் ரூ. 50-00
ஆறு மாதம் ரூ. 26-00
மூன்று மாதம் ரூ. 14-00
மலேசியா
ஒரு வருடம் ரூ. 70-00
ஆறு மாதம் ரூ. 38-50
மூன்று மாதம் ரூ. 20-50
தினசரி பிரதி: 10 சதம்
வாரப் பதிப்பு பிரதி 20 சதம்

இம்மானுவல்
திருச்செல்வம்ஸ்
C. W. E.
புடலவைகளுக்கு
பிரதான விநியோகஸ்தர்கள்
(மொத்த வியாபாரிகள்)
126, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 652

# சத்தியாக்கிரகம் நாளை நடைபெறாது

## மேலும் 3 மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது
### ஆலயப்பிரவேசத்துக்கு அரசாங்க அதிபர் முயற்சி

யாழ்ப்பாணம், வியாழன்

**தீண்டாமை ஒழிப்புக்காக அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கத்திட்டமிட்டிருந்த சத்தியாக்கிரக இயக்கம் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.**

நேற்று மாலை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் சத்தியாக்கிரகத்தை ஒத்திவைப்பதென முடிவுசெய்யப்பட்டது,

இந்தமகாநாட்டில் சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணிச் செயற்குழுவைச் சேர்ந்த திரு. எம். ஸி. சுப்பிரமணியம், முன்னாள் செனட்டர் ஜி. நல்லையா, ஆகியோரும் இந்து சமயப்பிரதிநிதிகளான திரு. செ. தனபாலசிங்கம், திரு. மு. வைரமுத்து ஆகியோரும் கலந்து கொண்டனர். நேற்று முன்தினம் தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக்குழு இணைச்செயலாளர்கள் திரு. வி. என். நவரத்தினம், திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோருடன் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்கள்பேச்சுவார்த்தை நடத்தினர்.

### கச்சேரி மாநாட்டு முடிவு

அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற மகாநாட்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள சத்தியாக்கிரக இயக்கத்தைப் பின்போட வேண்டுமென்றும் மூன்று மாத காலத்துக்குள் அரசாங்கஅதிபர், இந்து சமய தலைவர்கள், இந்து ஆலயக் குருக்கள்மார், ஆலயதர்மகர்த்தாக்கள் ஆகியோருடனும் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிச் செயற் குழுவினருடனும் கலந்தாலோசனை செய்து நாட்டிலுள்ள சகல இந்து ஆலயங்களிலும் பாகுபாடு எதுவுமின்றி சகலரும் சென்று சுவாமி தரிசனம் செய்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிச்செயற்குழுவினர் ஒப்புக்கொண்டு, சத்தியாக்கிரகத்தை ஒத்திவைப்

(8-ம் பக்கம் பார்க்க)

## பட்டினசபை பட்ஜட் தமிழில் சமர்ப்பிக்கப்பட்டது
### சங்கானையின் முன்மாதிரி

சங்கானை, வியாழன்

சங்கானை பட்டினசபையின் 1967-ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம்நேற்று சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1967-ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை பட்டினசபைத் தலைவர் தமிழில் சமர்ப்பித்துப் பேசுகையில் இம்முறையே வரவு செலவுத்திட்டம் முழுமையாக தமிழில் தயாரிக்கப் பட்டுள்ளதென்றும் இதனையே அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்போவதாகவும் குறிப்பிட்டார்.

1967-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மின்சார விஸ்தரிப்பிற்கும் பொது மலசல கூடம், கிணறு முதலியனவற்றுக்கும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளன. வரவுசெலவுத் திட்டப்படி இவ்வாண்டிற்கான வரவு 86,448-00ரூபாவாகவும் செலவு 84,158-00 ரூபாவாகவும் மதிக்கப்பட்டுள்ளது.

மின்சாரப்பகுதிப் பிரிவில் 45,800-00 ரூபா வரவாகவும், 45,406-00 ரூபா செலவாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### முதல்தடவை

நாட்டிலுள்ள பட்டினசபைகளில் ஒரு பட்டினசபை தனது வரவுசெலவுத் திட்டத்தை தமிழில் வெளியிட்டது இங்கு இதுவே முதற்தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஜவுளி பங்கீட்டு முறை விரைவில் நீங்கும்
### ராஜாங்கமந்திரி நடவடிக்கை

கொழும்பு புதன்

புடவை பங்கீட்டு முறை விரைவில் நீக்கப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை ராஜாங்க மந்திரி ஜே. ஆர். ஜயவர்த்தன மேற்கொண்டுள்ளார்.

ராஜாங்க மந்திரி திரு. ஜயவர்த்தனவிடம் முன் வர்த்தக அமைச்சின் கீழிருந்த முக்கிய பொறுப்புக்களான பாவனைப் பொருள்களின் கொள்முதல், இறக்குமதி ஏற்றுமதிக்கட்டுப்பாடு வர்த்தகர்களுக்கு லைசென்ஸ் வழங்குவது, ஆகிய பொறுப்புகளும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களும் சமீபத்தில் ஒப்படைக்கப்பட்டது தெரிந்ததே.

பங்கீட்டு முறையை நீக்குவது சம்பந்தமாக ஆலோசனை செயவதற்காக ராஜாங்க மந்திரி ஜே. ஆர். ஜய

(8-ம் பக்கம் பார்க்க)

## பீடிசுற்றும் இலைமரங்கள் ஊவாமாகாணத்தில் உண்டு
### காடுகளை குத்தகைக்கு எடுக்கலாம்

கொழும்பு, புதன்

பீடி சுற்றுவதற்கு உபயோகிக்கக்கூடியதான ஒருவகை இலை ஊவாமாகாணத்தின் கீழ்ப்பகுதியில் ஏராளமாகக்காணப்படுவதாகவும் இந்தஇலை தற்பொழுது இறக்குமதிசெய்யப்படும் பீடிசுற்றும் இலைகளுக்கு எந்த விதத்திலும் தரம் குறைந்ததாக இல்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சுமார் 60 அல்லது 70 லட்சம்ரூபாவுக்கு பீடி சுற்றும் இலைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. இதன்விலையும் ஏறக்குறைய அதேஅளவாகவே இருக்கின்றது. இப்போது இலங்கையில்காணப்படும் இலை பெருவாரியாக பாவனைக்கு வரும்பட்சத்தில் வெளிநாட்டுக்குச் செல்லும் ஏராள

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நவீன ஆயுள்வேத ஆஸபத்திரி
### 9 ஏக்கர் காணியில் நிறுவப்படும்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகளைக் கொண்ட ஆயுள்வேத ஆஸ்பத்திரியொன்று விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

இந்த ஆஸ்பத்திரி 134 படுக்கைகளைக்கொண்டதாக இருக்குமெனவும் வெளி நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு இடமிருக்குமெனவும் தெரிகிறது.

யாழ்ப்பாண நகருக்கு சில மைல் தூரத்துக்கு அப்பால் 9 ஏக்கர் நிலத்தில் இந்த ஆஸ்பத்திரி நிறுவப்படவிருக்கின்றது.

இந்த ஆஸ்பத்திரியில் ஒரு பகுதி ஆயுள்வேத வைத்திய [illegible] வும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து சுமார் 100 சித்த வைத்திய ஆயுள் வேத மாணவர்கள் இதில் பயிற்சி பெறுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## தீவுப்பகுதி எம். பி. சுகவீனம்

யாழ்ப்பாணம், வியா.

தீவுப்பகுதி எம். பி திரு. வி. நவரத்தினம் மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு ஓய்வு தேவை என்பதால் பார்க்கச்செல்பவர்கள் அனுமதிக்கப்படுவதில்லையென்று அறியப்படுகின்றது.

## உள்ளே . . .

○ சீனாவின் அணு ஆயுத வல்லமை; டாக்டர் லோஹியா கைது! — 3-ம் பக்கம்
○ சாதிப் பாகுபாடுகளை ஒழிக்க வழி என்ன? — 4-ம் பக்கம்
○ யாழ்ப்பாணம்சந்தை பண்ணை நோக்கி நகருகிறது — 5-ம் பக்கம்
○ மலைநாட்டுமண்சரிவு: மாண்டவர் விபரம் — 6-ம் பக்கம்
○ யாழ். புதிய பஸ் நிலையம் விஸ்தரிக்கப்படும் — 7-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கார்:
நல்லநிலைமையிலுள்ளவைக் சோல் வைவேர்ன் (Vauxhall Wyvern E L.6480) கார் விற்பனைக்குண்டு S R. தம்பையசிங்கம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1495

### கல்வி

வகுப்புகள்:
ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்காக விசேஷ ஆங்கில வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி /107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1494

### வைத்தியம்

தொய்வு, க்சம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விவரங்கள் அடங்கிய சற்றலோக் இருக்கும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று விபந்துள்ளனர். சித்த டாக்டர் ஸ்ரீ பூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### காணவில்லை

இலக்கோயில் மேலைவீதியில் உள்ள ஓர் வளவிலிருந்து ஒரு அடி உயரமான சிவப்பு நிற 'போமனேறியன்' சடைநாய் நேற்றுக்காலை காணமற்போய்விட்டது. அதன்முகம் பூனைமுகம் போன்றிருக்கும். அது இருக்கும் இடத்தைத் தெரியப்படுத்துபவர்களுக்கு அல்லது அதை எம்மிடம் சேர்ப்பிப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 54, மானிப்பாய்வீதி, வண்ணார்பண்ணை. 1496

## சூடு பிடிக்கவில்லை!

நியூயோர்க், நவ.16

இங்கு ஒருவீட்டில் நுழைந்து களவெடுக்க முயன்றவனைத் தடுக்கப்பொலிஸ்காரர் ஒருவர் சென்றபோது அவன் அவரைநோக்கிச் சுட்டான். துப்பாக்கி ரவை பொலிஸ்காரரின் பாட்ஜ், யூனிபாரம், செட், பேனையூடாகச்சென்று சாற்சட்டை வழியே விழுந்தது. ரவை பொலிஸ்காரரை அதிர்ச்சிக்குள்ளாக்கியதே தவிர வேறுதீங்கு செய்யவில்லை. அதிர்ச்சியிலிருந்து மீண்ட பொலிஸ்காரர் பதிலுக்குத் தனது துப்பாக்கியால் கள்வனைச் சுட்டுக்கொன்றார். பி. டி. ஐ.


**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண
விஜயமும் காண்பிக்கப்படும

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.-விஜயகுமாரி
நடித்த
**ஆசை அலைகள்**

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். -- சரோஜாதேவி
நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
James Stewart
Rosemary Forsyth
in
**SHENANDOAH**


## மாணவர்களின் அன்பளிப்பு

நாவலப்பிட்டி, புதன்

கண்டி செயின்ட் போல்ஸ் பௌத்த இளைஞர் மன்றத்தினர் கண்டி குருடர் செவிடர் பாடசாலைக்கு தங்கள் சேமிப்புப் பணத்தின் மூலம் வாங்கப்பட்ட புத்தர் சிலையை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளனர்.

மத்திய மாகாண அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ் அன்பளிப்பு விழாவில் கலந்து கொண்ட பௌத்தர்கள், கிறிஸ்தவக் கல்லூரி பௌத்த மன்றத்தைப் பாராட்டினார்கள்.

## ரஷ்யாவின் முன்னேற்றம்

பாரிஸ், நவ. 16

வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளின் இயக்கத்தின் காரியதரிசி திரு. மன்லியோ புரோஸியோ, மேற்கு ஐரோப்பிய ஒற்றுமைக்கும் சக்திக்கும் எதிராக சோவியத் ரஷ்யா உறுதியான, திட்டமிடப்பட்ட முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக எச்சரிக்கைசெய்தார். 15 ஒப்பந்த நாடுகளிலிருந்து வந்த பாராளுமன்றத்தவர் மகாநாட்டிலேயே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார். (பி. டி. ஐ.)

## 'மட்டக்களப்புக்கு இடமளிக்கவும்'

கொழும்பு, புதன்

பல்கலைக்கழக கனிஷ்ட கல்லூரிகள் நிறுவப்படும் இடங்களில் மட்டக்களப்பையும் சேர்க்குமாறு தமிழரசுக்கட்சி உயர்கல்வித் தேசிய சபையைக் கேட்டுள்ளது.

பல்கலைக்கழக கனிஷ்டகல்லூரிகள் ஸ்தாபிப்பதில் கிழக்குமாகாணம் விடுபட்டது அங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்களிடையே பெரும் அதிருப்தியை உண்டாக்கியுள்ளதாகக் கட்சித்தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தெரிவித்தார்.




## கொழும்பு

**வியாழன் 17 - 11 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 சுந்தர் அலங்காரம்,— தி. மாணிக்கவாசகர், 7-30 ஆதிப்பாடல்கள், 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் நிகழ்ச்சி— ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 தமிழோசைபாடல், 7-00 பேச்சு, 7-15 தாளவாத்தியக் கச்சேரி, 7-45 நாடகம், 8-00 [illegible] 9-15 [illegible] 9-30 [illegible] குமாரசாமி.

## இடமாற்றம்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு பொது மராமத்து வேலைப்பகுதி எஞ்ஜினியராகக் கடமையாற்றிய திரு. ஏ. இராஜபட்சம் உத்தியோக உயர்வு பெற்று கண்டிக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். இவரின் இடத்துக்கு எஞ்ஜினியர் திரு. எஸ். இராமநாதன் வந்துள்ளார்.

## மாணவர்கள் களை பிடுங்கினர்

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் கிராய் வயலில் களை பிடுங்கி வருகின்றனர். உடுப்பிட்டி அ. மி. கல்லூரி மாணவர்கள் துவாளி வயலில் களை பிடுங்கினர்.

## விளம்பரம்

### யாழ்ப்பாண மாநகரசபை ஏலவிற்பனை

30-11-66ம் திகதி புதன் கிழமைமுற்பகல்10-30மணிக்கு 15-ம் வட்டாரத்திலுள்ள கச்சேரி நல்லூர்வீதியில் நிற்கும் மகோகனி/ வாகை/ இலுப்பை மரங்கள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். கூடிய கேள்விக்காரர் உடனே முழுப்பணத்தையும் செலுத்திக் குறித்த காலத்திற்குள் மரத்தைத் தறித்து அப்புறப்படுத்தல் வேண்டும். ஏனைய விபரம் அலுவலக நேரத்தில் மராமத்துப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கட்சன் செல்வராசா)
மாநகரசபைஆணையாளர்.
15-11-66. 1383

## கோட்டு விற்பனவு விளம்பரம்

முத்தையா கந்தையா, நல்லூர். வழக்காளி

இல. P. 898 எதிராக

1. பூபதி மகள் சரோஜா
2. பூபதி மகள் லீலாவதி
3. பூபதி மகள் யோகம்மா
4. பூபதி புலேந்திரராசா எல்லோருக்கும் தந்தவக்காரன்.
5. கந்தையா பூபதி எல்லோரும் 10/A பண்டாரக்குளம் ரோட்டு, யாழ்ப்பாணம்.

எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் P. 898-ம் இலக்க பிரிவிடுதல் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1966-ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனவிபரம்


வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் டிவிஷன் நல்லூர் கோவிற்பற்று ''அரசகேசரி வளவு'' என்னும் 4 பரப்பு V. C. 7 குலி காணியில் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர் வகைகளும், எல்லை கிழக்கு தம்பையா சிறீஸ்கந்தராசாவின் ஆதனம். வடக்கு வாய்க்கால். மேற்கு ரோட்டு. தெற்கு செல்லத்துரை தியாகராசாவின் ஆதனம்.

இ. செ. லோறன்ஸ்பிள்ளை,
கொமிசனரும் உலாந்தாவும்.

விமல்காமம்,
தெல்லிப்பழை,
16-11-66. 1384


**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனித்தெரு)
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருமலை)
**மொடேர்ண்** (பண்டாரவளை) **மொடேர்ண்** (பதுளை) **விஜிதா** (ஹட்டன்)



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்

**கந்தசஷ்டி அபிஷேகத்திற்கு**
தேவையான
O அபிஷேகத் திரவியங்கள்
O அபிஷேகச் சந்தனம்
O அபிஷேகக் குங்குமம்
O அபிஷேக விபூதி
O அபிஷேக வாசனுதிகள்
O கற்பூரம், சாம்பிராணி
ஊதுபத்திகள்
சாஸ்திர முறைப்படி தயாரித்த
**அஷ்டபந்தன மருந்து**
மற்றும்
**சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**
கடந்த 33 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து
நற்பெயர் பெற்றவர்கள்
**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் இறக்குமதியாளர்களும்
மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 541
Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதங்களை சீன அதிகமாக உற்பத்தி செய்யும்

## சீன தினசரி தகவல்

### ஒப்பந்த யோசனை நிராகரிக்கப்பட்டது

பீகிங், நவ. 16

**கம்யூனிஸ்ட் சீன அணு ஆயுதங்களைத் தீவிரமாகத் தயாரிக்கும் என்று பீகிங் மக்கள் தினசரி தெரிவித்துள்ளது**

நேற்று வெளியான பீகிங் மக்கள் தினசரியில் இந்த விபரம் வெளியாகியுள்ளது.

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில் நாடுகள் இறங்கக் கூடாதென்றும் இது சம்பந்தமாக உலக நாடுகளுக்கிடையே ஒப்பந்தமொன்று உருவாக்கப்பட வேண்டுமென்றும் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் விடுத்திருந்த கோரிக்கையை நிராகரித்து இச்செய்தி வெளியாகியுள்ளது.

"அணு ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடாதென்று ஒரு ஒப்பந்தம் உருவாகுவதற்கு, முதலில் எல்லா நாடுகளிடமும் அணு ஆயுதங்கள் ஏராளமாகவிருக்க வேண்டும். அதன் பின்னரே இப்படியான தொரு ஒப்பந்தம் உருவாகுவதற்கு வழி பிறக்கும்." என்று அப் பத்திரிகை தெரிவிக்கிறது.

# டாக்டர் லோஹியா டில்லியில் கைது

புதுடில்லி, நவ. 16

நேற்றிரவு டில்லியில் இந்திய சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோஹியா எம். பி., டில்லி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இவருடன் மற்றுமொரு பாராளுமன்ற அங்கத்தவர் திரு. ராஜ் நாராயணனும் கைதுசெய்யப்பட்டார். இவரும் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் அங்கத்தவராகும்.

இன்று காலை கிடைக்கப் பெற்ற ஏஜன்ஸி செய்திகளின்படி சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டில்லி கிளை அங்கத்தவர்கள் பலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# "சுய உதவி முயற்சிகளில் நாடுகள் ஈடுபடவேண்டும்"

## அமெரிக்க விவசாய காரியதரிசி கோரிக்கை

வாஷிங்டன், நவ. 15

உணவுப் பற்றாக் குறையுள்ள நாடுகளின் தட்டுப்பாட்டைத் தடுக்கு முகமாக சுயஉதவி முயற்சிகளை அதிகரிக்க வேண்டுமென்று அமெரிக்க விவசாய இலாகா காரியதரிசி திரு. ஓவில் பிரீமன் அழைப்பு விடுத்துள்ளார்.

விவசாய இலாகாவின் 44-வது வருடாந்த மகாநாட்டில் அவர் பேசுகையில் விவசாய உற்பத்தியில் ஏற்படும் பற்றாக்குறை காரணமாக, கடந்த காலத்தைப் போல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உணவு இறக்குமதி அதிகரிப்பின், ஒரு சில வருடங்களில் இத்தொகை அமெரிக்கா உட்பட இதர அபிவிருத்தியடைந்த நாடுகள் வழங்கக் கூடிய உணவுப் பண்டத் தொகையைப் பார்க்கிலும் மேலோங்கிவிடும் என்றார்.

"பல கோடி டாலர் செலவில் நாம் எமது முயற்சிகளை அதிகரித்தாலும், அவை உலகின் உணவுப் பற்றாக்குறைக்குப் பரிகாரம் காணமுடியாது. இத்தகைய நடவடிக்கைகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை மென்மேலும் உணவு அன்பளிப்பில் நம்பியிருக்கச் செய்துவிடும். ஆதலால் அபிவிருத்தியடையும் நாடுகள் தமது சுயஉதவி முயற்சிகளை அதிகரிக்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# விண்வெளி வீரர்கள் பூமி திரும்பினர்

கெனடிமுனை, நவ. 16

"ஜெமினி-12" விண்வெளிக்கப்பலில் பூமியைவலம் வந்த இரண்டு அமெரிக்க வானவெளி வீரர்களும் நேற்றுநள்ளிரவு பத்திரமாக பூமிவந்துசேர்ந்தனர்.

அவர்களின் கப்பல் அத்திலாந்திக் சமுத்திரத்தில்முன்னரே குறிப்பிட்ட இடத்தில் "தொப்" என்று விழுந்ததும் சிலமைல் தூரத்தில் அங்கு தயாராகவிருந்த விமானம் தாங்கிக்கப்பல் அவர்களைப்பத்திரமாகக் கப்பலுக்குள் எடுத்தது.

நான்குதினங்கள்வரை விண்வெளியில் பிரயாணம்செய்த மேஜர் ஆல்ட்றினும் மேஜர் லோவலும் தங்களது விண்வெளி விஜயத்தின்போது இரண்டுபுதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். மேஜர் ஆல்ட்றின் விண்வெளியில் சுமார் இரண்டரை மணிநேரம்நடந்து பூமியை ஒன்றரைத்தடவைகள்வலம் வந்ததுடன் பல அற்புதமான சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளார். மேஜர் லோவல் "நீண்டநேர விண்வெளிப் பிரயாணி" என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவர்முன்னரும் விண்வெளியில் பிரயாணம் செய்திருக்கின்றார். மொத்தமாக இவர் பதினேழு தினங்கள் விண்வெளி யாத்திரை செய்துள்ளார்.

விண்வெளிப் பிரயாணிகள் இருவரும் கெனடிமுனை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர். இங்கு அவர்கள் தொடர்ச்சியான பல வைத்திய பரிசோதனைக்குள்ளாவார்கள்.

தேடுதல் நடத்திய

# ஹெலிகாப்டர்கள் மோதி நான்குபேர் மரணம்

டோக்கியோ, நவ. 16

இரண்டு தினங்களுக்கு முன்னர் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளான விமானத்திலிருந்தவர்களைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்ட இரண்டு ஹெலிகாப்டர்கள் நேற்று தெற்கு ஜப்பானில் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் நால்வர் உயிரிழந்தனர்.

இந்த இரண்டு ஹெலிகாப்டர்களும் நேற்று கடலில் தேடுதல் வேலைகள் நடத்தின. இரண்டுதினங்களுக்கு முன்னர் விமானமொன்று கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 51 பேர் மாண்டனர். இவர்களின் சடலங்களைத் தேடுவதில்தான் ஹெலிகாப்டர்கள் ஈடுபட்டிருந்தன.

# மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கட்டாக், நவ. 16

மாதா கோவில்களை மாணவர்கள் கொளுத்தினர். பொலிசார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசிப் பின் துப்பாக்கிச்சூடு நடத்தினர்கள். யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ஒரிசா மாநிலத்தில் கிறிஸ்தவர்கள் நடாத்தும் உயர் நிலைப்பள்ளிமாணவர்கள் பெற்றோர்களிடம் வாங்கும் நன்கொடையை ரத்துச் செய்யும் படியும் சம்பளத்தை குறைக்கும்படியும் கூறியே இவ் ஆர்ப்பாட்டத்தைச் செய்தார்கள். ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

# "காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்படும்"

## அதுவும் நன்மைக்கே என்கிறார் மந்திரிபட்டீல்

கல்கத்தா, நவ. 16

கல்கத்தாவிலுள்ள இளம் வர்த்தகபிரமுகர்கள் வைபவமொன்றில் ரயில்வே மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் பேசுகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பிரச்னைகள் குறித்து தற்பொழுது நடைபெற்றுவரும் வன்முறைக்கிளர்ச்சிகளில் அடங்கியுள்ள அபாயம் குறித்து எச்சரிக்கை செய்தார்.

"உலகில் பல நாடுகளில் இதைவிட தீவிரம் குறைந்த கிளர்ச்சிகளினால் ஜனநாயக அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முடிந்திருக்கிறது. ஆனால் இந்தியாவில் ஜனநாயகம் என்பது அரசியல் சடத்தை அலங்கரிக்கும் ஒரு கருத்தாகமட்டும் இருந்துவிடவில்லை. இங்கு இது ஒரு வாழ்க்கைமுறையாகவே ஆகிவிட்டது. தியாகங்கள் புரிவதன் மூலமும் கடும் உழைப்பின் மூலமும் அதனைப் போற்றிப் பாதுகாத்து வருவது மக்களின் கடமையாகும்" என்று திரு. எஸ். கே. பட்டீல் கூறினார்.

காங்கிரஸ் இன்று பல தரப்பட்டவர்களின் கூட்டமாகி விட்டது. அதில் சிலர் நேர்முரண்பாடான கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். பலதரப்பட்ட மக்களுடன் கூடிய ஒரு ரயிலைப் போல அது ஆகிவிட்டது. இது உடைந்தே தீரும்; ஆனால் எதிர்க்கட்சிகள் விரும்புவதுபோல இப்போதைக்கல்ல. தவிர்க்க முடியாத அந்தத்தருணம் வரும் பொழுது அது காங்கிரஸுக்கும் மக்களுக்கும் நல்லதாகவிருக்கும்" என்றும் அவர் கூறினார்.

"காங்கிரஸை வீழ்த்த முடியாது என்பதும் எதிர்க்கட்சிகளுக்குத் தெரியும். அதனால்தான் காங்கிரஸிலுள்ள முக்கியஸ்தர்கள் மீது அவதூறுகள் கூறி, அவர்களது நல்ல பெயரைக் கெடுக்கப்பார்க்கின்றனர். ஆனால் நாட்டை ஆளும் திறன் யாருக்கு உண்டு என்பதைக் கவனித்தறியும் கூர்ந்த மதி மக்களுக்கு உண்டு" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மரத்தால் வீழுந்தவனை....

வந்தவாசி, நவ. 16

வந்தவாசி ஆரணி வீதியில் உள்ளகட்டிடங்களில் புயலாலும் மழையாலும் வீடு இழந்தவர்கள் வந்து ஒதுங்கினார்கள். ஆனால் புயலின் வேகம் தாங்காமல் அந்தக் கட்டிடங்களும் இடிந்து விழுந்தன. இதில் நசுங்கிச் செத்த 7 பேரைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

# அணுசக்தி மின் நிலையம்

புதுடில்லி, நவ. 16

சென்னை அணு மின்சக்தி நிலையத்தின் முதலாவது யூனிட் 1971-ல் இயங்க ஆரம்பிக்கும் என்று லோக் சபையில் பிரதமர் இந்திரா காந்தி கூறினார்.

# 14 பேர் பலி

புதுடில்லி, நவ. 16

மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள சிலிகுரி அலிபூர்டார் புகையிரதப்பாதையில் ராணுவத்தினரின் தனிப் புகையிரதம் [illegible] கப்பட்டது. [illegible] பேர் கொல்லப்பட்டனர்.

# கோரிக்கை

புதுடில்லி, நவ. 16

தமிழ் நாட்டில் புயல் சேதத்தைச் சமாளிக்க 2 கோடி ரூபா வழங்கும்படி பிரதமர் இந்திரா காந்திக்கு [illegible] கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கெனடியை குறிபார்த்தது வேறொரு நபராம்

நியூயோர்க், நவ 16

டலாஸ்நகரில் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படமொன்றை யு. எஸ். சஞ்சிகையொன்று பிரசுரித்துள்ளது.

ஒருவர் காரில் குனிந்த நிலையில் துப்பாக்கியுடன் கென்னடியைக் குறிபார்க்கிறார்.

அப்படத்தில் காணப்படுபவர் கென்னடியைக்கொலை செய்ததாகக் கருதப்படும் ஒஸ்வால்ட் அல்ல இப்படம் இப்போது தான்பகிரங்கமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தில் காணப்படுபவர் கென்னடியைக் குறிவைத்தது உண்மையாயின் கென்னடியைக் கொன்றது ஒஸ்வால்ட் அல்ல; அல்லது அவர் ஒருவர் மட்டுமல்ல என்று ஆகிவிடும்.

கென்னடி கொலை குறித்து விசாரணை நடத்திய வாரன் கமிஷன் இப்படத்தை பிரசுரிக்கவில்லை.

சைகோன் அருகே

# புதிய விமான படைத்தளம் அமெரிக்கா அமைத்தது

சைகோன், நவ. 16

தென்வியட்நாம் தலைநகர் சைகோனுக்கு வடகிழக்கே ஒருகிராமத்தில் அமெரிக்கா புதிய விமானப்படைத் தளமொன்றை அமைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதியவிமானப்படைத்தளம் தென்சீன கடலுக்கருகே நிறுவப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே மீகாங்—டெல்டா பகுதியில் வியட்காங்கியரின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதால் தென்வியட்நாம் அரசாங்கம் உணவு நெருக்கடியை எதிர்நோக்கலாமென்று கருதப்படுகிறது.

வடக்கு வியட்நாமில் காலநிலை மோசமடைந்ததால் கடந்த இரண்டு தினங்களாக விமானக்குண்டு வீச்சு நடைபெறவில்லை.

# சமயச்சொற்பொழிவு

நாவலப்பிட்டி, புதன்

மலைநாட்டின் பல இடங்களிலும் சமயப்பிரசாரச் சேவையில் ஈடுபட்டிருக்கும் மதுரை ஆதீனத்து செஞ்சொற் செம்மணி மா. சண்முகவல்லி அம்மையார் 17-ம் திகதி நோட்டன் பிரிட்ஜ் சித்திவிநாயகர் ஆலயத்தில் "கந்தன் கருணை" எனும் விடயம்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் அஹிம்சாவாதிகளாக இருக்க விரும்பினால் மிகமிகக் கீழான நிலையில் இருப்பவர்களுக்கு இந்த உலகில் எது கிடைக்காதோ அதை அடைய வேண்டுமென்று விரும்பக்கூடாது.

—மகாத்மா காந்தி.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box [illegible] JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone [illegible]

யாழ்ப்பாணம் [illegible] ஆண்டு கார்த்திகை 2 உ (17-11-66)


## சத்தியாக்கிரகம்

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் நாளை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த சத்தியாக்கிரக இயக்கம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பது ஆறுதலும் மகிழ்ச்சியுமளிக்கிறது. இந்த நல்ல முடிவுக்கு காரணமாக இருந்த அரசாங்க அதிபர் உட்பட அனைவரையும் பாராட்டுகிறோம்.

சாதிப்பாகுபாடு, தீண்டாமை என்னும் கொடுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பதில் இன்று தமிழ் மக்கள் மத்தியில் அபிப்பிராயபேதம் அதிகமில்லை. ஆனால் இதை எப்படி ஒழித்துக் கட்டுவதென்பதில் தான் அபிப்பிராயபேதமிருக்கிறது. மூன்றுமாத அவகாசம் கொடுக்கப்பட்டு எதுவித பயனும் கிடைக்கவில்லையாதலால் இனியும் தாமதம் எதற்கு என்று சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் கேட்கலாம். அதில் நியாயமுமிருக்கலாம். ஆனால் பல்லாண்டுகளாக ஊறிப்போன ஒரு பழக்கத்தை உடனடியாக மிகக் குறுகிய காலத்துக்குள் நீக்குவதென்பது சுலபமல்ல. எனினும் பல வேறு பிரச்னைகளுக்குள்ளும் தீண்டாமைப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண்பதற்கான முயற்சிகளில் பலரும் ஈடுபட்டு வந்துள்ளனர்; வருகின்றனர்.

சத்தியாக்கிரக இயக்கம் சாத்விகமானதுதான். ஆனாலும் அரசியல், மற்றும் லாபம் பெறும்நோக்கமுள்ளவர்கள் நமது நாட்டில் மட்டுமல்ல வேறு நாடுகளிலு மிருக்கிறார்கள். அவர்கள் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கி நிலைமையைக் குழப்பப் பார்ப்பார்கள். இதற்கு சமீபத்தில் டில்லியில் நடந்த சம்பவம் உதாரணம். பலவருடங்களாகப் பொறுத்து வந்தவர்கள், இன்னும் சிறிது காலம் பொறுத்து தீண்டாமையைச் சட்ட மூலமும் மனமாற்றம் மூலமும் ஒழித்துக்கட்ட முனைவோருக்கு ஆதரவும் உதவியும் அளிக்கவேண்டும். அதுவரை அவர்களுக்கு அவகாசமும் அளிப்பது நல்லது. இதேசமயம் இனியும் தமக்குள் ஒரு பிரிவினரை ஒதுக்கி வைத்து வாழ்வது நல்லதுமல்ல; முறையுமல்ல; நடைபெறக் கூடியதுமல்ல என்பதையும் தமிழ் மக்கள் உணர்ந்து ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க துரிதமுயற்சி செய்யவேண்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்க அதிபரின் முயற்சிக்கு தமிழர் அனைவரும் ஒத்துழைப்பளித்து தமிழ் சமுதாயத்தின் சாபக் கேட்டை ஒழிக்கமுன்வர வேண்டும்.

## பத்திரிகைகளின் பணி

'மனித மனத்தை ஒழுங்கப்படுத்தி உருவாக்கும் சக்தி பத்திரிகைகளுக்கு உண்டு. அந்தசக்தியை தீய காரியங்களுக்குப் பயன் படுத்தாமல் உலகின் அமைப்புக்காகப் பயன்படுத்த வேண்டும். சமுதாய சமத்துவம், உலக ஒற்றுமை ஆகிய பொதுவான இலட்சியங்களை அவை கொண்டிருக்க வேண்டும்' என்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், புதுடில்லியில் சர்வதேசப் பத்திரிகைப் பிரதிநிதிகள் மகாநாட்டில் உரைநிகழ்த்துகையில கூறிய யோசனை பத்திரிகையாளரின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

கொலை, கொள்ளை மற்றும் தீய செயல்கள், சம்பவங்களையே இப்போது பத்திரிகைகள் பெரிதுபடுத்திப் பிரசுரிக்கின்றன. அமெரிக்காவில் நடந்த சில கொலைச் சம்பவங்கள் பற்றிய செய்திகளைப்படித்த ஓர் இளைஞன் அதேபோன்ற செயலில் ஈடுபட்டு நான்கு பெண்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்திருக்கிறான். வாசகர்கள் கொலைச்செய்திகளை விரும்புகிறார்கள் என்பதற்காக அவற்றையே பெரிதுபடுத்திப் பிரசுரித்தல் உலகில் தீய செயல்களுக்கே ஊக்கமளிப்பதாகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் பத்திரிகைகள் செய்யவேண்டிய பணி மகத்தானது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவை வேறு திசையில் சென்றுகொண்டிருக்கின்றன. தேசிய ஐக்கியமே இன்று இலங்கைக்கு மிகமிக அவசியமானது. குறுகிய நோக்கமும் அரசியல் நோக்கமும் இதை மறைத்து விடுகின்றன. அரசாங்கத்துக்கும் பத்திரிகைகளுக்குமிடையில் கூட நெருங்கிய தொடர்பு இல்லை. தேசிய ஐக்கியத்தை உருவாக்கவும் மக்களை நல்வழிப்படுத்தவும் பத்திரிகைகள் பணிபுரிய வேண்டும். இதற்கு பத்திரிகையாளர் தமக்குள் ஒரு சபை நிறுவி தமக்கென சில கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு செயலாற்ற வேண்டும். டாக்டர் ராதாகிருஷ்ணனின் யோசனை இதற்கு வழிகாட்டுவதாக இருக்க வேண்டும்.

திருநெல்வேலி, வியாழன்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் தினமும் கந்த சஷ்டி திருவிழா நடைபெற்று வருகின்றது மேற்படி விழாவை முன்னிட்டு தினமும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளால் விசேஷ தேவார வகுப்புகளும், பஜனைகளும் நடாத்தப்பட்டுவருகின்றது.

# சமாதானவீரர் வண. சரணங்கரதேரோ

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், 15 வருடங்களுக்கு மேலாகத் தொழிலாளர் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவருமான வண. உடக்கந்தவெலசரணங்கார தேரோ சென்ற ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

காலஞ் சென்ற சரணங்கார தேரோ உலக சமாதானத்துக்காக அயராது உழைத்தார். மேடைப் பேச்சுக்கள் மூலமாகவும், 'நவ லோகய' என்ற தனது சஞ்சிகை மூலமாகவும் அவர் உலகில் உள்ள எல்லா நாடுகளையும் சமாதான சகவாழ்வுக் கொள்கையைப் பின்பற்றி உலகில் சமாதானம் நிலவ உதவும்படி வேண்டுகோள் விடுத்தார்.

எட்டு வருடங்களுக்குமுன்னர், சரணங்கார தேரோவுக்கு லெனின் சர்வதேச சமாதானப் பரிசு வழங்கப்பட்ட போது, "சமாதானம், முன்னேற்றம் இவற்றுக்கான போராட்டத்தில் நான் கஷ்டம் அனுபவித்துள்ளேன். பிரிட்டிஷாரின் கீழ், ஏழு வருடங்கள் நான் சிறைவாசம் இருந்தேன். ஆனால், நான் உயிருடன் வாழும் வரை, அணுசக்தி ஆயுதங்களிலிருந்தும், போரிலிருந்தும் இவ்வுலகை விடுவிக்கும் நம்பிக்கையுடன் நான் தொடர்ந்து சமாதானத்துக்கே உழைப்பேன்" என்று அவர் கூறினார்.

வண. சரணங்காரதேரோ பிரிட்டிஷாருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததற்காக இந்தியாவில் பிரிட்டிஷாரால் பலதடவைகள் சிறையிடப்பட்டார். சில வருடங்களுக்கு முன்னர் பசிபிக் தீவுகளில் அணு ஆயுத பரிட்சை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்ட போது, அதைத் தடுக்கும் பொருட்டு, தனது உயிரையே தியாகம் செய்ய முன்வந்து, பசிபிக் தீவுகளுக்கு புறப்படத் தயாரானார்.

தமிழ் மொழியிலும் பாண்டித்திய முடைய வண. சரணங்கர தேரோ மேடையில் தமிழிலும் உரை நிகழ்த்தியிருக்கிறார். உலகசமாதானமே அவரது குறிக்கோள். அதுவே அவரது இலட்சியம். அதற்காகவே அவர் வாழ்ந்தார். வண. சரணங்கார தேரோவின் மறைவினால் உலகம் ஒரு சமாதான வீரரை இழந்து விட்டது.

—எம்

# சாதிப்பாகுபாடுகளை - -ஒழிக்க வழி என்ன?

இந்தச் சாதிப்பாகுபாடுகளை ஒழிப்பது எப்படி? சட்டம் மட்டும் இதைச் செய்யமுடியாது. இதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று பூரணமான சமூகப் புரட்சி; மற்றொன்று பெரும் சீர்திருத்தம். சாதியை அங்கீகரிக்காத ஒருவகையான மதத்தில், எல்லா இந்துக்களையும் ஆழமான நம்பிக்கைகொள்ளச்செய்யும் பெருஞ்சீர்திருத்தமாயிருக்க வேண்டும்.

'ஒருவர் தன்னிடமுள்ள இன வகுப்பைச் சேர்ந்தவர் என்ற உணர்ச்சியை முழுவதுமாகக் கைவிடும் வரை, எந்தச் சட்டமும் சாதி ஒழிப்பு நோக்கத்தை ஈடேற்றி விடாது. இது புரட்சி மூலமோ, சீர்திருத்தம் மூலமாகவோ தான் நடைபெறமுடியும்— நான், சீர்திருத்தம் மூலம் நடைபெறுமென்று நம்புகிறேன்'.

—சென்னை உயர்நீதிமன்ற மாஜி பிரதம நீதிபதி இராசமன்னார்.

ஃ ஃ ஃ

ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட சாதீய முறைகள் இங்கு அர்த்தமற்றவை — தேவையற்றவை; அழிக்கப்பட வேண்டியவையே. 'சில பழக்கவழக்கங்களும், சம்பிரதாயங்களும், அவற்றின் அவசியம் நீங்கிய பின்பும் நின்று நிலவுகின்றன. ஆழப் பதிந்துவரும் இத்தகைய பழக்கவழக்கங்களை அழித்துவிடுவது கடினமாக இருக்கிறது.

'நம் நாட்டில் இங்கு சிலர் சாதிகளை ஒழிக்கிறோமென்று கூறிக்கொண்டே சாதீயத்தை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் செயலாற்றிவருகின்றனர்; இது துரதிஷ்டமானது.

'சாதிகளை ஒழிப்பதுபற்றிப்பேசுவது சுலபம்! ஆனால் செயலிலேதான் கஷ்டம் எல்லாம்'.

—அமைச்சர் சி. சுப்பிரமணியம்.

ஃ ஃ ஃ

'சாதிமுறை இங்கு கொடுங்கோன்மை ஆயுதமாகவும், சுரண்டல் முறையாகவும் ஆகிவிட்டது. இங்கு நாட்டின்முன் உள்ள பிரச்னை எல்லாம் இந்தச் சாதிமுறையையும், அதனைத் தொடரும் தீமைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா, அல்லது அவற்றை அழித்து ஒழிக்கவேண்டுமா என்பது தான்.'

[illegible]

வைத்துக்கொள்ளலாம்; அதனால் பலன் இல்லை என்பது மட்டுமன்றி, பாதகம் தான் ஏற்படுகிறதுஎன்றால், இந்தச் சாதிமுறையை விட்டொழிக்க வேண்டியது தானே?"

"இதை ஒழிப்பதற்கு வழி என்ன? சீர்திருத்தம். இந்தச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள தூரத்தொலைவில் உள்ள கிராம மக்களுக்கும் கூட சாதி ஒழிப்புப் பற்றிப் பிரச்சாரம் செய்ய ஒரு தொண்டர்படை, ஊழியர் பட்டாளம் தேவை.'

'ஆனால், இந்த ஊழியர் படையை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு இவர்கள் ஏதோ ஆகாத காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கூறுவோர் இந்த நாட்டில் இருக்கின்றனர். இது போலப் பிரித்துப் பிரித்துப் பேசிக்கொண்டிருந்தால், நம்மால் சாதிமுறையை ஒழிக்கமுடியாது'.

'ஒரு புதிய சமுதாயம் காணவிழையும் அனைவரும், எல்லாக்கட்சி ஊழியர்களும் கொண்ட ஒரு கூட்டு முன்னணி தேவை. இந்த ஊழியர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாய் இருக்கவேண்டும்".

சாதியை ஒழிக்க ஒரு திட்டமிட்ட சீர்திருத்தமே சரியான வழி.

—அறிஞர் சி. என். அண்ணாதுரை.

### முன்னேறமுடியாது

சாதிவித்தியாசம் இருக்கிறவரை எந்த நாடும் முன்னேறமுடியாது. ஆகவே சாதியை ஒழித்துக்கட்டியே தீரவேண்டும். காலம்வந்தால் ஜாதிகள் தானாகவே ஒழிந்துவிடும்என்று நினைத்து சும்மா இருக்கக்கூடாது, சாதியை ஒழிக்க பெரும் புரட்சிசெய்யவேண்டும்.

—ஜகஜீவன்ராம்

## நாட்டிலும் நகரிலும்

பசுவதையை தடை செய்யுங்கள் என்று கூறி மனிதவதைக்கு ஏதுவாயிருப்பது, இரும்புத் தொழிற்சாலை வேண்டுமென்று கூறி இருப்புப் பாதைகளைப் பிடுங்கி எறிவது தீண்டாமை ஒழிய வேண்டுமென்று கூறி தேநீர்க் கடைக்குள் திடும் பிரவேசம் செய்வது ஆகிய இம்மூன்றும் ஒரே இனத்தைச் சேர்ந்தவையாக எனக்குத் தோற்றுகிறது. நோக்கங்கள் மூன்றும் நன்மை பயப்பவைதான் ஆனால் அவற்றை அடையக் கையாளப்படும் உத்திகள் தீமை பயப்பவை. லட்சியம் உயர்வானது; மார்க்கம் தாழ்வானது.

ஈழத்துத் தமிழர்களின் சமுதாயத்தில் தீண்டாமை என்பது ஒரு புற்று நோய் வளர்ச்சி போன்றது. சிலர் இதை புற மருத்துவத்தாலும் அகமருத்துவத்தாலும் அகற்றலாம் என்று நினைக்கிறார்கள். வேறு சிலர் இதை சத்திர சிகிச்சை செய்து அறுத்தெறிய வேண்டுமென்று ஆத்திரப்படுகிறார்கள். முதற்கூறிய முறையால் நோய் படிப்படியாக ஆனால் முற்றாக அற்றுப் போகும். இரண்டாவது முறையால் நோய் அந்த நேரத்துக்கு மட்டும் அகற்றப்பட்டது போலத் தோற்றலாம் ஆனால் அதனால் தேகத்தில் நிரந்தர [illegible] வடுக்கள் ஏற்பட்டு [illegible]ம்.

தீண்டாமை என்பது மனித சமுதாயத்தில் காணப்படும் வேற்றுமைகளைக் குறிக்கும் ஒரு பொதுப் பதம். இது இந்துக்களிடையோ, தமிழர்களிடையோ மாத்திரம் இருப்பதல்ல. எல்லா மனிதர்களிடத்தும், எல்லா இனத்தினிடத்தும், எல்லா சாதியினிடத்தும் எல்லா நிறத்தவரிடத்தும், எல்லா மதத்தவரிடத்தும் காணப்படுகிறது. வெள்ளையன் - கறுப்பன், சைவன் - வைணவன், யூதன் - கிறிஸ்தவன் என்று பல வேறுபாடுகள் இருக்கின்றன. வெள்ளையனுக்குள்ளும் நோர்மன், சாக்ஸன் என்ற பிரிவுகளுண்டு. கறுப்பனுக்குள்ளும் தமிழன், சிங்களவன் என்ற பிரிவுகளுண்டு. தமிழனுக்குள்ளும் தொழிலாலும், நடையுடை பாவனைகளாலும் வேறுபட்ட சாதிகளுண்டு. சிங்களவரிடையும் அப்படியே. இத்தவிதமாக சாதிக்குள் சாதியாயும், இனத்துக்குள் இனமாயும், குலத்துக்குள் குலமாயும் வித்தியாசங்கள் இருந்தபோதிலும் மனித வர்க்கம் எல்லாவற்றிற்கும் பொதுவான சில அம்சங்கள் உண்டு எல்லா மனிதருக்கும் பசி, தாகம் போன்ற சில பொதுத் தேவைகளுமுண்டு. இவற்றை எல்லா மனிதரும் சமமாகப் பகிட்டு அனுபவித்துக் கொள்ள எல்லா மனிதருக்கும் உரிமையுண்டு. அந்த உரிமைகளை மறுப்பதற்கு வேறு மனிதருக்கு உரிமை இடையாது.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணையில் நிறுவப்படும் தற்காலிக சந்தை

## மீன், கருவாடு, இறைச்சிக் கடைகள் இடம்மாற்றப்படும்

யாழ்ப்பாணம், வியா. தற்காலிக சந்தையொன்று பண்ணையில் நிறுவப்படவிருக்கிறது. இச்சந்தைக்கான ஆரம்பவேலைகள் ஜனவரியில் நடைபெறுமென அறியப்படுகிறது.

பஸ்நிலையத்திற்கு அருகில் உள்ள மீன்சந்தை, கருவாட்டுக்கடைகள் யாவும் பண்ணையில் நிறுவப்படும். தற்காலிக சந்தைக்கு மாற்றப்படவிருக்கிறது.

தற்பொழுது பஸ்நிலையமும் உள்ள நிலத்தில் நவீன சந்தை அமைக்கப்படவிருப்பதாலேயே பண்ணையில் தற்காலிக சந்தை நிறுவப்படவிருக்கிறது. நவீனசந்தையின் வேலைகள் பூர்த்தியானதும் மீன்கடைகள் இறைச்சிக்கடைகள், மீண்டும் மாற்றப்படுமென்று அறியப்படுகிறது.

நவீன சந்தையின் முதலாவது பகுதி வேலைகள் முடிவடைந்ததும் இரண்டாவது பகுதி வேலைகள் ஆரம்பமாகும். அப்பொழுது பழைய பஸ்நிலையத்திற்கு எதிராகவுள்ள கடைகள் தற்காலிகமாக வேறு இடத்திற்கு மாற்றப்படுமென்றும் தெரியவருகிறது.

## சத்தியாக்கிரகத்தைக் கைவிடுமாறு கிராமசபை கோரிக்கை

உடுவில், புதன்

''தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந் நாட்டில் நிலவும் தீண்டாமையை ஒழிப்பதற்குச் சட்டம்மூலம் நடவடிக்கை எடுக்க இருக்கும் இச் சந்தர்ப்பத்தில் சிறுபான்மைத் தமிழர் முன்னணியினர் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிப்பது நல்லதல்ல'' என்று கோரும் ஒரு தீர்மானம் உடுவில் கிராம சபைக்கூட்டத்தில் நிறைவேறியது. சபைத்தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

### மற்றுமொரு தீர்மானம்

''பெரும்பான்மை இன மக்களுடன் சமாதானமாக நடந்து அவர்கள் பூரண ஆதரவுடன் ஆலயப்பிரவேசம்செய்வதே சிறந்தது. அதைவிடுத்து, பலாத்காரமானமுறையில் சத்யாக்கிரகம்செய்து ஆலயப்பிரவேசம்செய்வது சிறுபான்மைத் தமிழருக்கே தீங்கைவிளைவிக்கும். ஒரு சில அரசியல்கட்சிகள் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தூண்டிதமிழ்மக்களிடையே பிளவை உண்டுபண்ணப் பார்க்கிறார்களேதவிர சிறுபான்மை இனமக்கள் நலன் கருதி அவர்கள் இதை செய்யவில்லை'' என்ற தீர்மானத்தை கந்தரோடை இந்து இளைஞர் சனசமூக நிலையமுன்னணியினர் நிறைவேற்றியுள்ளார்கள்.

### புதிய அரசாங்க சேவை

கொழும்பு, புதன்

இலங்கை நிர்வாகசேவை, இலங்கை வெளிநாட்டுச் சேவை இவற்றின் ரீதியில் பொருளாதார சேவை ஒன்றையும் நிறுவும் திட்டத்தைத் தயாரிக்கும்படி திட்ட, பொருளாதார விவகார அமைச்சு பணிக்கப்பட்டுள்ளது.

திட்ட, பொருளாதார விவகார அமைச்சிலும், மற்ற அமைச்சுகளிலும் கடமையாற்றும் பொருளாதாரர்களும், ஆராய்ச்சிக் குழுவினரும் இப் புதிய சேவையில் சேர்க்கப்படுவர்.

### காரியாலயம் இடமாற்றம்

உடுவில், புதன்

உடுவில் பகுதி கிராம சேவகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. ச. சின்னத்தம்பி தமது காரியாலயத்தை உடுவில் மகளிர் பாடசாலைக்கு முன்பாக மாற்றியுள்ளார்.

### நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மனிதன் கடவுளைக் கும்பிட விரும்பினால் இன்னொருவன் அவனைத் தடை செய்யப்படாது நான் வணங்கும் கடவுளைத்தான் நீயும் கும்பிட வேண்டுமென்று ஒருவன் இன்னொருவனைக் கட்டாயப்படுத்தலாகாது. நான் வணங்கும் கடவுளை நீ வணங்கலாகாது என்றும், ஒருவன் மற்றவனைக் கட்டுப்படுத்தலாகாது. கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட அந்த ஆறுவது அறிவு அப்படித்தான் கூறச் சொல்லுகிறது.

கடவுளை வணங்கும் இந்த விஷயத்தில் மனிதருக்குள்ளேஏன் இப்படி அடிபிடி ஏற்பட வேண்டு மன்பதே பெரிய ஆச்சரியமாயிருக்கிறது. 'நான் கடவுளை இந்த இடத்தில் கும்பிடுகிறேன், நீ வேறிடத்தில் போய்க் கும்பிடு' என்று சிலர் கூறுகிறார்கள். மற்றவர்கள் 'இல்லை நீ கும்பிடும் இடத்தில் தான் கும்பிடுவேன்' என்று மல்லுப்பிடிக்கிறார்கள்.

கடவுளே! எல்லோரும் எல்லா இடத்திலும் எப்பொழுதும் உன்னை வணங்கிக் கொண்டிருக்கப் படாதா?

—வழிப்போக்கன்

### மந்திரிக்கு மகஜர்

அளவெட்டி, புதன்

நெசவுத்தொழில்போதனாசிரியரையும் நெசவு நிலையத்திற்கு தேவையான உபகரணங்களையும் தந்துதவுமாறு உள்நாட்டு அமைச்சருக்கு தையிட்டி கி. மு. சங்கம் மகஜர் சமர்ப்பித்துள்ளது.

உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தஹநாயகாவுக்கு தையிட்டி கிராம முன்னேற்றச்சங்கம் அளித்த வரவேற்பின்போது சபைத்தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை இம் மகஜரை சமர்ப்பித்தார்.

வரவேற்புக்கு 'நன்றி தெரிவித்துப் பேசிய உள்நாட்டு அமைச்சர் திரு. தஹநாயகா, குடிசைக் கைத்தொழில் இலாகாவின்மூலம் ஆவன செய்வதாக உறுதி கூறினார்.

### கந்த சஷ்டி

சாவகச்சேரி, புதன்

மறவன்புலம் முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தசஷ்டி விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

### யாழ். நூல்நிலையக் கட்டட வேலைகள்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் பொதுநூல் நிலையத்தின் கட்டட வேலைகள் விரைவில் பூர்த்தியாகும். பொதுவேலைப்பகுதியினர் இவ்வேலையைச் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

பொதுசன நூல்நிலையத்தைப் பூர்த்தியாக்கும் வேலைகளுக்கு எழுபதாயிரம் ரூபா மதிப்பீடுசெய்யப்பட்டுக் கேள்விப்பத்திரம் கோரப்பட்டது. எவரும் விண்ணப்பிக்காததால் பொதுவேலைப் பகுதியினர் தாங்களே இவ்வேலையைச் செய்ய முன்வந்துள்ளனர்.

### எதிரி விடுதலை

சாவகச்சேரி, புதன்

தாக்குதல் வழக்கொன்றில் சாட்சியங்கள் முரண்பாடாக இருந்ததால் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

வி. குமாரசுவாமி என்பவரை ஆர். வைத்தியலிங்கம் தாக்கியதாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபர்ட் சில்வா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது சாட்சியங்கள் முரண்பாடாக இருப்பதாக நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார்.

எதிரிகள் சார்பில் புரக்டர்கள் ஆர். டி. சிவகுரு, வி. செல்லத்தம்பி ஆஜரானார்கள்.

### கைக்கடிகாரம் களவு: சந்தேகநபர் கைது

திருநெல்வேலி, வியா

யாழ்ப்பாணம் பழைய தபாற்கந்தோர் வீதியிலுள்ள ஒரு வீட்டில் கைக்கடிகாரம் ஒன்றைத் திருடியது சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் மாத்தறையைச் சேர்ந்த எம். எஸ். பாரூக் என்பவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

தனது வீட்டுக்கு நட்பு முறையில் வந்து தனது இருநூறுரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தை மேற்கண்ட நபர் களவாடிச் சென்றதாக ஏ. எம். மொஹடீன் என்பவர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குச் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே பொலிஸ் கான்ஸ்டபிள் இரத்தினதாசா பாரூக்கைக் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்தார் கைக்கடிகாரமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### பதிவுகாரர் பரீட்சை

யாழ்ப்பாணம், வியாழன்

வடமராட்சி பிறப்பு இறப்பு, திருமண பதிவுகாரர் வேலைக்கு நான்கு பெண்கள் உட்பட 24 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வேலைக்கான நேர்முகப்பரீட்சை இம் மாதம் 25-ம் தேதி புலோலி ஆண்கள் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம், வியாழன்

ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் பொதுக் கூட்டம் திரு. வ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. சபையின் ஆதரவில் வழக்கமாக நடைபெறும் சமயஅறிவுப் போட்டிகளை டிசம்பர் மாதத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

# "அரைகுறைத் தமிழில் பதில் அனுப்புகின்றனரே"

## நீதிமந்திரிக்கு கிளிநொச்சி எம். பி. புகார்

கிளிநொச்சி, புதன்

தமிழ் மொழிச் சட்டம் சரியான முறையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமுல் செய்யப்படவில்லையெனவும் அவற்றை நடைமுறைக்கு கொண்டு வரத் தயங்கும் உத்தியோகத்தர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை உடனடியாக எடுக்கும்படியும் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் நீதி அமைச்சர் திரு. எப். விஜயமானவிற்கு எழுதிய கடிதமொன்றில் கோரியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

''சில அரசாங்க உத்தியோகத்தர்கள் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு அரைகுறை தமிழில் கையெழுத்திடாது பதில் அனுப்புகின்றனர். இது தமிழ் மொழிச்சட்ட விதிகளுக்கு முரணானது. ஆகையால் கையெழுத்திடாது அனுப்பப்படும் கடிதங்கள் தமிழ் மக்களை சிறுமைப்படுத்துவதாகும். இதனை மனதில் கொண்டு தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு கடிதங்களை தமிழில் முழுமையாக அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். அத்துடன் நிரந்தரக் காரியதரிசிகளினதும் திணைக்கள அதிபர்களினதும் கவனத்திற்கு இது விஷயத்தை கொண்டு வருமாறும் கோருகின்றேன்.''

### கல்வீச்சு வழக்கில் அபராதம்

யாழ்ப்பாணம், வியா

கணவனையும், மனைவியையும் கல்லால் எறிந்து காயப்படுத்தியதாக நவாலியைச் சேர்ந்த இருவர்மீது தாக்கல்செய்யப்பட்ட வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நவாலியைச் சேர்ந்த கந்தையா பவளலிங்கம், வேலுப்பிள்ளை செல்லத்துரை ஆகியோர் தம்பிமுத்து சின்னையாவையும், அவரது மனைவி செல்லாச்சியையும் கல்லால் எறிந்து காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் புறக்டர் விஸ்வநாதனும், வழக்காளி சார்பில் புறக்டர் தவராஜசிங்கம் யோகநாதனும் ஆஜரானார்கள். விசாரணையின் பின் மாஜிஸ்திரேட் முதலாவது எதிரிக்கு 75 ரூபாவும், கோடு கலையும்வரை மறியலும், 6 மாத நன்நடத்தைப் பிணையில் செல்லுமாறும் தீர்ப்பளித்தார். இரண்டாவது எதிரிக்கு 15 ரூபா முடிக்குரிய செலவுக்குக் கட்டும்படியும் உத்தரவிட்டார்.

### வண்ணை ஸ்ரீ காமாக்ஷி மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா

சரித்திரப் பழமைவாய்ந்த நாச்சிமார் கோவில் என அழைக்கப்படும் காமாக்ஷி அம்பாள் ஆலயத் திருப்பணி வேலைகள் முடிவுறும் தறுவாயிலிருக்கின்றன. இக் கோவில் கும்பாபிஷேகம் தை மாதம் 13ந் திகதி நடைபெறும். கும்பாபிஷேக தினம் தொடக்கம் 45 தினங்கள்வரை விசேஷ அபிஷேகமும், திருவிழாவும் திரு. கா. கு. சிவசுப்பிரமணியக்குருவின் 'கம்பராமாயணம்' தொடர்ச்சிப் பிரசங்கமும் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

### வருடாந்த கூட்டம்

திருநெல்வேலி, வியாழன்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவைக் கூட்டுறவு சிக்கனக் கடன் நிவிர்த்திச் சங்கத்தின் பத்தாவது வருடாந்தக் கூட்டம் நாளை நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில்சௌக்கிய சேவை சங்கத்தின் 18 'வி' உத்தேசித்திருந்த உபவிதிகள் மாற்றியமைக்கும் ஆலோசனை நடைபெறவுள்ளது. இவ் விதியில் விசேஷகடனாக ஐந்து மாதச் சம்பளமோ சந்தாவோ சேர்த்து ரூபா ஆயிரமாகக் கடன் கொடுப்பதை மாற்றி இரண்டுவருடச் சம்பளமும் சந்தாவும் அல்லது இரண்டாயிரம் ரூபா கடனுகக் கொடுப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

### கட்டாக்காலி மாடுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் மீண்டும்யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது. பஸ் நிலையம் சந்தை போன்ற பொது இடங்களில் மாடுகள் கூட்டம் கூட்டமாக இரவு வெகுநேரம் வரை காணப்படுகின்றன. இதன் விளைவாக மாநகர சபை ஊழியர்கள் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் வேலையில் மீண்டும் இறங்கியுள்ளனர்.

கடந்த 15 தினங்களாக யாழ்ப்பாணத்தில் 50 கட்டாக்கலி மாடுகளைப் பிடித்துள்ளனர்தற்பொழுது 24 மாடுகளும், 3 குதிரைகளும் மாநகரசபைவளவிற்குள் கட்டப்பட்டிருக்கின்றன. சொந்தக்காரர்கள் இவற்றை யாரமேற்காவிடில் 10 நாட்களின் பின்னர் ஏலத்தில் விற்கப்படும்.

### பழைய மாணவர் சங்கம்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை அரிச். என்றிபரசர் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் புனருத்தாரணம் செய்யப்படவிருக்கிறது. இம்மாதம்26-ந்திகதி கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### புதிய நேர அட்டவணை: மாணவர் கஷ்டம்

சாவகச்சேரி, புதன்

யாழ்ப்பாணத்தில் கல்வி பயிலும் சாவகச்சேரிப் பகுதி மாணவர்கள் பாடசாலைவிட்டதும் மாலைநேரத்தில் புகைவண்டிக்காக ஒரு மணித்தியாலம்வரை யாழ்ப்பாணத்தில் காத்து நிற்க வேண்டியுள்ளது. புதிய அட்டவணையினால்தான் இக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

### பீடிசுற்றும் . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மானபனம் மிச்சமாவதுடன் பீடியின் விலையும் குறைய வாய்ப்புஏற்படலாம். ஊவா மாகாணத்தில் காட்டுநிலத்தில் இந்தஇலைரகங்கள் இருப்பதாகவும், இத்தக்காடுகளை குத்தகைக்கு விட அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

பீடி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமாபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவை உட்பட தனிப்பட்ட நபர்களும் இத்தக் காடுகளை குத்தகைக்கு எடுக்கலாம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாடு கண்டிராத மண்சரிவின் விளைவு

## கணக்கப்பிள்ளை குடும்பம் உயிரோடு புதையுண்ட பரிதாபம்

### 10 சடலங்கள் இன்னும் மீட்கப்படவில்லை

கொல்லாந்தை, புதன்

அப்புத்தளை பெரகலை சந்தியில் ஏற்பட்ட மண்சரிவால் 7 உயிர்கள் பலியாகின; 10 பசுக்கள் உயிர் துறந்தன. 10 பேரின் சடலங்கள் இன்னும் மீட்கப்படவில்லை.

ஒரே இரவில் 5 மிகப் பெரிய மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக பெரகலை தோட்ட கணக்கப்பிள்ளை வீடு அப்படியே மண்ணுள் சிக்குண்டது. இதனால் மையன் கணக்கப்பிள்ளை (வயது 42), புவனேஸ்வரி (வயது 15), வசந்தா (வயது 17), ஜோதீர்பலி (வயது 14) ஆகியோர் ஸ்தலத்திலேயே மண்ணுள் புதையுண்டு உயிர் துறந்தனர்.

அந்து மூலை பத்கொடையில் பெரிய மலையிலிருந்து உருண்டுவந்த பல மிகப் பெரிய கற்களும், மண்ணும் மூன்று கடைகளை இருந்த இடம் தெரியாமல் செய்ததால் அக்கடைகளிலிருந்த திருமதி சூரியன் (45), மாரியாய் (32) ஆகியோரும் பெயர் தெரியாத 15 வயது மதிக்கத்தக்க இளைஞனும் மாண்டனர்.

இடதுபக்கத்தில் உள்ள இந்துகோவிலொன்று சேதமின்றித் தப்பியது, ஆச்சரியமளித்துள்ளது. புதிதாகக் கட்டப்பட்டு வரும் புத்தகோயிலொன்றின் சட்டங்களை உடைத்துக்கொண்டு பெரும் கற்கள் பெரும் பள்ளத்தில் சென்றுள்ளன.

இவ்விபத்தால் பெரகலை சந்திசலவிதத்திலும் துண்டிக்கப்பட்டு விட்டது. அங்கு தங்கிய 25 வாகனங்கள் ஒருதிசையிலும் செல்லமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன.

சகல போக்குவரத்தும் கடித, தந்திபோக்குவரத்தும் இல்லாமல் துண்டிக்கப்பட்டுள்ளது கொல்லாந்தை நகரம்.

இவ்விபத்தை பார்வையிடச் சென்றபலரும் காயங்களுக்குள்ளானார்கள் செய்திசேகரிக்கச் சென்ற ஒருநிருபர் பலத்த காயங்களுக்குள்ளாகிமருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பெரும் விபத்தை பார்வையிட்ட இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் (அப்புத்தளை) திரு. டபிள்யூ பி. ஜி. ஆரியதாஸா "இதுபோன்ற விபத்து இப்பகுதியில் இதுவரை ஏற்பட்டதில்லை என்று ஈழநாடு நிருபரிடம் கூறினார். திரு. ஆரியதாஸாவும் பலகாயங்களுக்குள்ளானார்.

பெரும் பெரும் கற்கள் எந்தநிமிஷத்திலும் உருண்டு வரலாம் என்று அஞ்சப்படுகிறது. இங்கு வாழும் அனைவரையும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது.

உடன் நிவாரணவேலையில் ஈடுபட நடவடிக்கை எடுக்குமாறு அப்புத்தளை எம். பி. டபிள்யூ. பி. ஜி. ஆரியதாஸா பொதுவேலை மராமத்து மந்திரிக்கு தந்தி மூலம் விண்ணப்பித்துள்ளார்.

## "நீடித்தபோராட்டமே வெற்றியளிக்கும்"

### தீண்டாமை ஒழிப்பு கூட்டத்தில் பேச்சு

உடும்பராய், புதன்

"அநுராதபுரத்திற்கு இடதுசாரியினர் நடத்த விருந்த ஊர்வலம் தடை செய்யப்பட்டதற்கு பிரதமர், பாராளுமன்றத்தில் விளக்கம் கொடுத்தார். ஆனால் கன்னாகத்தில் சிறுபான்மைத் தமிழரின் ஊர்வலம் தாக்கப்பட்டதற்கு விளக்கம் எதுவும் பிரதமர் கொடுக்கவில்லை. அடுத்து நாங்கள் யாழ்ப்பாணத்தில் நடத்த இருக்கும் ஊர்வலத்திற்கு பிரதமர் அனுமதி தருவாரா?"

உரும்பிராயில் நேற்று மாலை நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு பிரசாரக் கூட்டத்தில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். பிரதேச கமிட்டி செயலாளர் திரு. வி. ஏ. கந்தசாமி பேசும் போது மேற்கண்டவாறு கேட்டார்.

உரும்பிராய் முற்போக்கு வாலிபர் சங்கத்தால் நடாத்தப்பட்ட இக் கூட்டத்திற்கு திரு. கா. நடராசா தலைமை வகித்தார்.

திரு. வி. ஏ. கந்தசாமி மேலும் கூறியதாவது:

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பழக்க வழக்கத்தின் பெயரால, பண்பாட்டின் பெயரால், தேச வழமையின் பெயரால், இந்த சாதி அமைப்பு கட்டிக் காத்து வரப்படுகிறது. இதை ஒரு நொடியில், சத்தியாக்கிரகத்தின் மூலமோ, மனமாற்றத்தினாலோ தீர்க்க முடியாது. இது ஒவ்வொரு மனிதனின் இரத்தத்திலும், சிந்தனையிலும் ஊறிப்போய்விட்டது. இதைமாற்றியமைக்க வேண்டுமானால் தொடர்ச்சியான, விட்டுக் கொடுக்காத, விடாப்பிடியான போராட்டத்தினால் தான் சாதிக்க முடியும். அதற்காக எந்த வித தியாகத்தையும் செய்யக் கூடிய, மக்களியக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

திருவாளர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், கா. செந்திவேல், நீர்வை பொன்னையா வ. தி. செல்வராசா ஆகியோர் பேசினார்கள்.

## அமெரிக்க விமானம் நொறுங்கியது

மேற்கு பெர்லின், நவ. 16

பெர்லினுக்கு சாமான் கொண்டுசென்ற அமெரிக்க 'போயிங் 727' விமானமொன்று நேற்று கிழக்கு ஜெர்மனி மீதாகச் செல்கையில் வீழ்ந்து நொறுங்கி விட்டதென அறிவிக்கப்பட்டது. வேறுவிபரங்கள் இதுவரை தெரியவில்லை.

(பி டி. ஸி)

## விளையாட்டு வினையானது

திருச்சி, நவ. 16

தீபாவளி பட்டாசு வெடித்தபோது திருச்சி உறையூரில் 50வீடுகள் சாம்பல் ஆயின,

## செய்திச் சுருக்கம்

**மண்சரிவின் எதிரொலி**

பெரகல, பத்கோட தோட்டங்களில் ஏற்பட்ட பயங்கர மண்சரிவையடுத்து அப்பகுதியிலுள்ள மக்கள் குடும்பம் குடும்பமாக வெளியேறுகின்றனர்.

ஃ ஃ ஃ

**லஞ்ச விசாரணை**

லஞ்சப் புகார்கள் சம்பந்தமாக சாட்சியமளிக்க விரும்புவோர்கள் வாக்குமூலங்களை அவர்களது வீடுகளில் சென்று பதிவுசெய்ய லஞ்சவிசாரணை இலாகா முடிவுசெய்துள்ளது.

ஃ ஃ ஃ

**விரைவில் ஆரம்பமாகும்**

இலங்கை வரவழைக்கும் விமானங்கள் வந்ததும் வழக்கம்போல் மட்டக்களப்புக்கும் விமானசேவை ஆரம்பிக்கப்படும் என உள்ளூராட்சி அமைச்சர்செனட்டர் மாணிக்கத்திடம் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

**இளம்பிள்ளை வாதம்**

கல்லோயாவிலும் நீர்கொழும்பிலும் இளம்பிள்ளைவாத நோய் தீவிரமாகப் பரவுவதால் போலியோ தடுப்பு நடவடிக்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

**சுட்டுக்கொலை**

பெலியத்தைக் கொடக்கும்புரையில் ஐந்துபிள்ளைகளின் தந்தை வில்லியம் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார், சந்தேகத்தின் பேரில் ஏ. பி. பிரேமதிலக என்பவர். கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

**மேலதிக வருமானம்**

வெளியூரிப் பகுதிகளில் இருந்து வருமான வரிப்பகுதி நடத்திய பரிசோதனைகளால் பதினைந்து லட்சம் ரூபா மேலதிக வருமானமாகப் பெற்றுள்ளது.

ஃ ஃ ஃ

**அங்கீகாரம்**

அடுத்த ஐந்து வருடகாலத்தில் 750 டாக்டர்களை நியமிக்க அமைச்சர் குழு அங்கீகரித்துள்ளது.

ஃ ஃ ஃ

**தபால்மூலம் தந்தி**

சென்றவாரப் புயல்காரணமாக இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படும் தந்திகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுகின்றன.

ஃ ஃ ஃ

**பொலிஸ நிலையங்கள்**

அடுத்தாண்டு முடிவதற்குள் பொலிஸ்படையை விஸ்தரிக்கவும் கூடுதலான பொலிஸ் நிலையங்களை இலங்கை முழுவதும் நிறுவவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தேசித்துள்ளார்.

ஃ ஃ ஃ

**எதிர்காலம் சுபீட்சமானது**

சகல இனங்களும் ஒன்றுபட்டால்தான் நாடு முன்னேறமுடியும். இன்றைய தேசிய ஒற்றுமை எதிர்காலத்தில் சுபீட்சத்தைத் தரும் என்று போக்குவரத்து அமைச்சர் கட்டுவ...

## 'ராக்' மாணவிகளுக்கு அதிக தண்டனை

கொழும்பு, புதன்

நவம்பர் 2ல், பேராதனைப் பல்கலைக் கழக விடுதி மண்டபம் ஒன்றில் புதிதாகச் சேர்ந்த இரு மாணவிகளை 'ராக்' பண்ணியதற்காகத் தண்டனை விதிக்கப்பட்ட 11சிரேஷ்ட மாணவிகளுக்கு மேலும் தண்டனை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் நடைபெறும் தவணை முடியும்வரை வகுப்புகளிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர் அத்துடன் இவர்கள் பல்கலைக்கழகவளவுக்குள் வசிக்கும் உரிமையும், நன்கொடைப் படிப்பு நிதியும் பறிமுதல் செய்யப்படும். பதினொரு பெண்களில் 9 பெண்கள் நன்கொடை உதவி பெறுபவர்கள்.

## வைர நெக்லஸ் மறைந்தது

கொழும்பு, புதன்

ஓரியானா என்ற கப்பலின் பெண் பிரயாணி ஒருவர் கப்பலின் ஏஜெண்டுகள் மூலம் தமது சாமான்களின் ஒருபகுதியை இறக்குவித்திருந்தார். மாலையில் பொருள்களை மீட்கச்சென்ற போது, தனது வைர நெக்லஸ் ஒன்று களவாடப்பட்டிருந்ததைக் கண்டார் பொலிஸாருக்கு விஷயம் அறிவிக்கப்பட்டது. பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். இதுவரை நெக்லஸோ அல்லது அதை களவெடுத்தவரோ கண்டு பிடிக்கப்படவில்லை.

## லட்சப்பேர் வீடிழந்தனர்

சென்னை, நவ 16

சென்னையில் பெய் மழையினாலும் ஏரிகள் நிரம்பிவழிவதாலும் ஆயிரக்கணக்கான குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கின. சுமார் ஒரு லட்சம் பேர் வீடிழந்துள்ளனர்.

## சமசமாஜக் கட்சி வாலிபர் ஊர்வலம்

கொழும்பு, புதன்

பொரளையிலிருந்து தெஹிவோளை வரையுள்ள 50 மைலுக்கு, ஊர்வலத்தில் செல்வதற்கு லங்கா சமசமாஜக் கட்சியின் இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த 30,000 வாலிபர் திட்டமிட்டுள்ளனர்.

தெஹிவோவிற்றலில் ஜனவரி 13, 14ந் தேதிகளில் நடைபெறவிருக்கும் வாலிபர் இயக்க வருடாந்த மகாநாட்டுக்கு, சமசமாஜக் கட்சியின் 870 வாலிப சங்கங்களிலிருந்து அங்கத்தவர்கள் ஊர்வலத்தில் செல்வார்களெனத் தெரிகிறது.

## திரை மறைவில் லட்சாதிபதிகள்

கொழும்பு, புதன்

வருமான வரி இலாகாவின் பிரதேசக் காரியாலய உத்தியோகஸ்தர்கள், கணக்குக் காட்டப்படாத வருமானமாக வருடத்துக்கு 10 லட்சம் ரூபாயிக்கு மேல் சம்பாதிக்கும் மூன்று நபர்களைக் கண்டுபிடித்துள்ளனர். கடந்த வருமான வரிச் சலுகைகளில் தெரிவிக்கப்பட்ட வருமானங்களுக்கு மேலதிகமான தொகையே இதுவென உத்தியோகபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாநகரசபையில் இரண்டாம்தர மராமத்து அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. ஏ. செல்லத்துரை பதவி உயர்வு பெற்று முதலாம்தர மராமத்து அதிகாரியாக நீர்கொழும்பிற்கு அடுத்த வாரம் முதலாம் திகதி செல்கிறார். அவருடைய இடத்திற்கு திரு. எஸ் சுப்பையா திருகோணமலையிலிருந்து இங்குவர இருக்கிறார்

## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

**தனதிகாரி,**
**தேர்த் திருப்பணிச்சபை,**
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென். மேரிஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நொக்கவுட் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டதில் சென். மேரீஸ் விளையாட்டுக் கழகம் குருநகர் கோஷ்டியைத் தோற்கடித்தது.

முன்னர் இவ்விரு கோஷ்டியும் பங்குபற்றிய உதைபந்தாட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

சென். மேரிஸ் கோஷ்டியின் திறனமான 'பாசிங்' விளையாட்டு ரசிகர்களை மிகவும் கவர்ந்தது. இதன் பலனாக அநேக கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களைப் பெற்ற சென். மேரிஸ்வீரர்கள் இரு கோல்களை இடைவேளைக்கு முன் அபாரமாக விளாசினர். இவ்விரு கோல்களையும் இக்கோஷ்டியின் இடதுமுன்னணிவீரர் மரியதாஸ் அருமையாக அடித்தார். இடைவேளையின் போது குருநகர் கோஷ்டி ஒரு கோலும் அடியாத வகையில் நாவாந்துறை இரு கோல்கள் பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் விளையாட்டு ஆரம்பமானதும் மின்னல்வேகத்தில் பந்தைப் பறிமாறிக் கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் நாவாந்துறை வீரர்கள் குருநகர் கோஷ்டியின் கோல் கம்பங்களுக்கருகாமையில் கோல் போட முயற்சி செய்து கொண்டிருந்தபோது குருநகர் கோல் காப்பாளர் சேவியரின் தலையில் காயமேற்பட்டது. அவர் பந்தைத் தாவிப் பிடிக்க முயன்றபோது வீரர்களுடன் பலமாக மோதிய காரணத்தினாலேயே அவர் காயத்துக்குள்ளானார். பின்னர் உடனடியாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இடைவேளைக்குப் பின் ஒருவரும் கோல் போடவில்லை. நாவாந்துறையின் கோல்காப்பாளர் அமிர்தநாதன், அருமைத்துரை, மைக்கேல்தாசன், சேவியர் ஆகியோரின் விளையாட்டு குறிப்பிடத்தக்கது. குருநகர் கோஷ்டியில் ஜனியுஸ், டபிள்யு. பி. வின்சன்லோ ஆகியோர் திறமையாக விளையாடினர். இப்போட்டி முடிவில் நாவாந்துறை 2 - 0 கோல்களால் குருநகர் கோஷ்டியைத் தோற்கடித்தது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## ஞானோதயா வெற்றி

அளவெட்டி, புதன்

கட்டுவன் ஞானோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் இரண்டாவது வருட பொன்னம்பலம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கட்டுவன் ஞானோதய விளையாட்டுக் கழகமும் பலாலி இராணுவ விளையாட்டுக்கழகமும் கலந்து கொண்டன.

இப்போட்டியில் கட்டுவன் ஞானோதய விளையாட்டுக் கழகம 7-1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. சிவராசசிங்கம் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

## கி. மு. சங்க புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, புதன்

அளவெட்டி மகாஜன வாசிகசாலையில் நடைபெற்ற அளவெட்டி கிராமமுன்னேற்றச் சங்க வருடாந்த கூட்டத்தில் பின்வருவோர் இவ்வருட உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: பண்டிதர் திரு க. நாகலிங்கம், உப தலைவர்: திரு. மு தில்லைநடராசா, காரியதரிசி: திரு. க. துரைராசா, உதவிக் காரியதரிசி: திரு. செ. இராசேந்திரா, தனாதிகாரி: திரு சி. பாலசுப்பிரமணியம் பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

சங்கத்தின் ஆக்க வேலைகளைப் பாராட்டி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். சி. மாணிக்கவாசகர், வலி. வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை, வலி. வடக்கு விவசாயப் போதனாசிரியர் எஸ். அப்பாத்துரை, கன்னாகம் உதவி பொலிஸ் அதிகாரி எஸ். இராசையா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

## இலங்கை வர்த்தகர்களுக்கு அதிக உரிமை

கொழும்பு, புதன்

உள்நாட்டு வர்த்தகக் கொள்கையைச் சீர்திருத்த ராஜாங்க மந்திரி திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகளில், இலங்கை வர்த்தகர்களின் உரிமைகளும், பொதுமக்கள் தேவைகளைத் திருப்திப்படுத்துவதும் இரண்டு முக்கிய அம்சங்களாக விளங்கும்.

அத்தியாவசியப் பொருட்களின் இருப்பைக் கணக்கெடுக்கவும், நிலைமையைப் புனராலோசனை செய்யவும் ராஜாங்க அமைச்சு அதிகாரிகளும், நிரந்தரக் காரியதரிசி திரு. ஆனந்தா திஸ்ஸ டி. அல்விஸும் இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

அரசாங்கத்துடன் பங்கு ஏற்று, அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியிலும், விநியோகத்திலும் இலங்கை வர்த்தகருக்கு அதிக உரிமையும், பொறுப்பும் அளிக்கும் திட்டம் ஒன்றை ராஜாங்க மந்திரி ஆலோசித்து வருகிறார்.

# 'ஊர்ப்பெயரைக் கெடுக்கக்கூடாது'

### திருட்டு வழக்கு விசாரணையில் நீதிபதி குறிப்பு

மாவிட்டபுரம், புதன்

"பெரியவர்கள் பிறந்த ஊரின் பெருமையை கெடுக்கக்கூடாது" என்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். திற்சிங்கா, ஒரு சாராய வழக்கு விசாரணையின்போது குறிப்பிட்டார்.

உரும்பிராயைச் சேர்ந்த நாகர் சிவலிங்கம், நாகமுத்து சின்னையா ஆகிய இருவரும் இன்று 720 ட்ரும் கோடா, 54 ட்ரும் வடிசாராயம் வைத்திருந்ததாகவும், சட்டவிரோதமாக வடித்ததாகவும், சாராயம் வடிக்கிற சாமான்கள் வைத்திருந்ததாகவும் கன்னாகம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். திற்சிங்கா முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கு எடுத்ததும், நீதிபதி உரும்பிராயில் வடிசாராயம் தயாரிப்பதனை இந்த நீதிமன்றம் நிறுத்தத் தீர்மானித்துள்ளது என்றார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே செல்வரத்தினம் நீதிபதியிடம் உரும்பிராயில் சிலர் செய்யும் தொழிலுக்காக எல்லாரையும் அப்படிக் கதைக்கூடாது என்றும் தியாகலிங்கம் முதலான சட்ட மேதைகள் அங்குதான் உள்ளவர்களென்றும் சொன்னார்.

அப்போது நீதிபதி, பெரியவர்கள் பலருள்ள ஊரின் பெயரை, இப்படியான செயல்கள் செய்து கெடுக்க கூடாதென்றார்.

முதலாம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி இரண்டாம் எதிரியை விடுதலைசெய்து, முதலாம் எதிரிக்கு 300 ரூபா அபராதம் விதித்தார். எதிரிகள் சார்பில் திரு. ஆர். ஜே செல்வரத்தினம் ஆஜரானார். சப்-இன்ஸ்பெக்டர் இராசையா வழக்கை நடத்தினார்.

## யாழ். புதிய பஸ் நிலையம் விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையம் விரைவில் விஸ்தரிக்கப்பட இருக்கிறது. தற்பொழுது மீன்சந்தைக்கு அருகிலிருக்கும் யாழ்ப்பாணம் மேற்கு டிப்போ பஸ்களுக்காகவே விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறவிருக்கின்றன.

மாநகரசபையினால், நவீன சந்தைக்காகக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலத்தில் தான் பஸ்நிலைய விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற இருப்பதாக அறியப்படுகிறது. பஸ் நிலையத்தின் சீர்கேடுகள் பற்றி, பஸ் பிரயாணிகளும், பஸ் பிரயாணி சங்கங்களும் நீண்ட நாளாகக் குறைபட்டுக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விசேஷ அபிஷேகம்

அளவெட்டி, புதன்

கீரிமலையை அடுத்த போயிட்டி மலைச்சாரலில் நகுல முனிவர் தவம் செய்த இடத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள சிவலிங்கத்துக்கு விசேஷ அபிஷேகமும் திருவிழாவும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது இவ் விழாவில் கூட்டு வழிபாடும் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இச் சிவலிங்கத்துக்கு அருகாமையில் சடையம்மா சமாதியும் சங்கு கப்பைபர் சமாதியும் கிருஷ்ணன் ஆலயமும் அமைந்திருக்கிறது.

## சேர் பொன். இராமநாதன் ஞாபகார்த்த விழா

யாழ்ப்பாணம், வியா

இராமநாதன் கல்லூரியில் இம்மாதம் 18ந் தேதி சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஞாபகார்த்த விழா நடைபெறும். இவ் விழாவில் திரு. வி. மட். ஏ. பெரேரா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறார். விழா, வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெறும்.

## "வர்க்க ரீதியில் போராடுவோம"

கொத்மலை, புதன்

"உலகநாடுகளின் முன்னேற்றம் நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டுவரும் இன்றைய நிலையில் மலைநாட்டு மக்கள் மட்டும் அன்று எந்நிலையில் இருந்தார்களோ, அதே நிலையில் இன்றும் வாழ்கின்றார்கள். மலையக மக்கள் ஒன்றுபட்ட இனமாக வர்க்கரீதியில் முதலாளித்துவத்தோடு போராட முனைய வேண்டும்" என்று கொத்மலை-உனுக்கொட்டுவ தோட்டத்தில் நடந்த பொதுக்கூட்ட மொன்றில் தேசிய தொழிலாளர் சங்க மத்தியகுழுத்தலைவர் திரு. எஸ். பெருமாள் பேசுகையில் கூறினார்.

யாழ்ப்பாணத்தில்

# நுவரேலியா கோஷ்டி மீண்டும் தோல்வி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்துள்ள நுவரேலியா பரிசுத்த டிரினிற்றி கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் பிரிவுச் சாம்பியனான கனகரெத்தினம் மத்தியமகாவித்தியாலய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான போட்டியில் கனகரெத்தினம் கோஷ்டி வெற்றியீட்டியது. விறுவிறுப்பாக ஆரம்பமான இப் போட்டி முடிவுவரையும் ரசிக்கக்கூடியதாக இருந்தது.

கனகரெத்தினம் கோஷ்டி வலது முன்னணி வீரரான சுதேசநாதன் தலையால் அடித்த ஒரு பந்து எதிர் கோஷ்டி வீரரின் காலில் பட்டு நுவரேலியாவின் கோலுக்குள் புகுந்துவிட்டது. இதன் மூலம் இடைவேளையின்போது நுவரேலியா ஒன்றும் போடாத வகையில் கனகரெத்தினம் ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளையின் பின் ஆட்டம் சுறுசுறுப்பாக இருந்தது. இருகோஷ்டியும் பலப் பரீட்சையில் ஈடுபட்டன.

கனகரெத்தினம் கோஷ்டியினர் துரிதமாக முன்னேறி பல கோலடிக்கும் சந்தர்ப்பங்களை பெற்றனர். வலது முன்னணி வீரர் சுதேசநாதன், மத்திய முன்னணி வீரர் இம்மனுவல் ஆகிய வீரர்கள் சூட்டோடு சூடாக இருகோல்களை அடுத்தடுத்து விளாசினர். நுவரேலியாக் கோஷ்டியில் காப்டன் ராஜவேல் மின்னல்வேகத்தில் பந்துகொண்டு சென்று அதிரடியோட்டு ஒருகோல் பெற்றார். இக் கோலுக்கு ரசிகர்களின் பலத்த அப்ளாஸ் கிடைத்தது. அவரது ஆட்டம் பாராட்டக்கூடியதாக இருந்தது.

கனகரெத்தினம் கோஷ்டியின் காப்டன் சில்வஸ்ரின் விளையாட்டு சிறப்பாகவிருந்தது. இப்போட்டி முடிவில் கனகரெத்தினம் கோஷ்டி 3—1. கோல்களால் நுவரேலியாவைத் தோற்கடித்தது. யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஈ. கனகலிங்கம் மத்தியஸ்தம்வகித்தார்.

## இந்துமாமன்ற ஆண்டு நிறைவு விழா

மத்துகம, புதன்

மத்துகம இந்துமாமன்றத்தின் எட்டாவது ஆண்டு விழா 19ம் திகதி மத்துகம ஆனந்தாக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு கொழும்பு விவேகானந்தா சபைத் தலைவர் திரு. மு. வைரவப்பிள்ளை தலைமைவகிப்பார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசச்செயலாளர் திரு. த. துரைசிங்கம் திருமதி உருத்திரா கந்தசாமி, திரு. பி. தேவராசன் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். பிரஸ்தாயமன்றத்தினால் நடாத்தப்பட்ட சமயப்போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களைத் திருமதி செ. குமாரசாமி வழங்குவார்.

## இந்துவாலிபர்சங்க கந்தசஷ்டிவிழா

நாவலப்பிட்டி, புதன்

நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்க ஆதரவில் கந்தசஷ்டி விழா நடைபெற்று வருகின்றது. ஒருவாரத்திற்கு நீடிக்கும் இவ்விழாவில் பெருந்தொகையானவர்கள் கலந்து கொள்கின்றனர்.

தினமும் கந்தபுராணத்தில் முருகன் அவதாரப் படலம் பாடப்படுவதோடு சமயச் சொற்பொழிவுகளும் விரிவுரைகளும் நடைபெறுகின்றன. திரு. க. நடராஜா, திரு. சி. கந்தையா, திரு. க. திருநாவுக்கரசு, சிவஸ்ரீ இரத்தினசாமிக்குருக்கள், திரு. நா. முத்தையா, வைத்தியகலாநிதி மு. வேதாரணியம், எஸ். நடராசா, நாகேந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

கிரீக்கோ சூப்பர் கோப்பி

கொழும்பு ஜோன் கீரின் அன்ட் கம்பனியாரின் உற்பத்தி

கவர்ச்சியூட்டும் பைக்கற்றுகள்! அதி நறுமணம் கொண்டது!

மறக்கவே முடியாத ருசியுடையது! நிதான விலை!

கொழும்பில் உள்ள கிரீக்கோ கைத்தொழில் நிலையத்தில் விசேஷ தயாரிப்பு முறைகளைக் கையாண்டு வறுத்து அரைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

M. M. T. P.

142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு 13 புதிய பஸ்கள்

திருநெல்வேலி, வியா.

இலங்கைபோக்குவரத்துச் சேவைப்பகுதியினர் ராக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணப்பகுதிக்கு புதிய பஸ்கள் பதின் மூன்று அனுப்பப்பட்டுள்ளன. இதில் ஆறு புதிய டாடா பென்ஸ் பஸ்கள் யாழ்ப்பாணம் டிப்போவுக்கும் ஏழு லேலண்ட் பஸ்கள் பருத்தித்துறைக்கும் சேவைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்துக்குஅனுப்பப்பட்ட பஸ்கள் காரைநகர், ஊர்காவற்றுறை, மாதகல், தீவுப்பகுதிகளுக்கு சேவைக்கு விடப்பட்டுள்ளன.

அடுத்தமாத இறுதிக்குள் இன்னும்எட்டுஇரட்டைத்தட்டு பஸ்கள் யாழ்ப்பாணம்வர இருப்பதாக யாழ்ப்பாணம் இ.போ.ச. உயர்தர அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். இந்த பஸ்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் இவைகள் கீரிமலை, பலாலி, கொடிகாமம்' பகுதிசேவைகளுக்காக விடப்படுமென்றும், காரைநகர். வீதிகள் சரியாக சீர்திருத்தப்பட்டால் அப்பகுதி சேவைக்கும் புதிதாக இரட்டைத்தட்டு பஸ்கள் விடப்படும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

## தேவை

25-11-66க்கு முன்பாகத் தமது டெழுத்து இலிகிதர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தராதரங்கள்:
   - (அ) எஸ். எஸ். ஸி. ஆகிலம் அல்லது தமிழ்.
   - (ஆ) தமிழ் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் ஆங்கிலத் தட்டெழுத்திலும் நல்ல தேர்ச்சியிருத்தல் வேண்டும்.
2. வேதனம்:
   - (அ) ரூ. $\frac{60 — 125}{5 \times 13}$
   - (ஆ) வாழ்க்கைப்படிச் செலவும் விசேஷ படிச் செலவும் அரசாங்க விகிதப்படி.

முதலியார் வை. மகேசன்
தலைவர்.

வடபகுதி விவசாய, உற்பத்தியாளர், கூ. சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

1385

## நிருபர்கள் தேவை

'ஈழநாடு' பத்திரிகைக்கு பின்வரும் இடங்களில் செய்திநிருபர்கள் தேவை. பத்திரிகை அனுபவமுள்ளவர்களும் கல்வித் தராதரமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி, செய்திஆசிரியர் 'ஈழநாடு' த. பெ. எண் 49 யாழ்ப்பாணம்.

- மட்டக்களப்பு
- அக்கரைப்பற்று
- பொத்துவில்
- வாழைச்சேனை
- ஏறாவூர்
- சிலாபம்
- நீர்கொழும்பு
- குருநாகல்
- மொரகாவலை
- கொடிகாஞ்சேனை
- வெள்ளவத்தை
- கொம்பனித்தெரு

## 'ஆசிரியர்கள் அதிர்ஷ்டசாலிகள்'

அச்சுவேலி, செவ்வாய்

''பச்சிளங்குழந்தைகளைப் பண்படுத்தும் பொறுப்பு ஆரம்ப வகுப்புகளிற் படிப்பிக்கும் ஆசிரியர்களிடம் கொடுக்கப்படுகிறது. இந்த ஆசிரியர்கள் அதிர்ஷ்டசாலிகள்'' என்று அச்சுவேலி சங்வேஷன் பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. எஸ். வி. வேலுப்பிள்ளை உதவிஆசிரியராகக் கடமைபுரிந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திருமதி மி. செல்லத்துரையின் பிரிவுபசாரவைபவத்துக்குத்தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார். திருமதி செல்லத்துரை கடந்த 10 ஆண்டுகளாக இப்பாடசாலையில் கடமைசெய்து இம்மாதம் அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரிக்கு இடமாற்றப்செய்யப்பட்டுள்ள அவருக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் இந்த உபசாரத்தைநடத்தினர். திரு. கே. இராசகோபால், திருமதி எஸ். ஆறுமுகம் ஆகியோர் பேசினர். திருமதி எஸ்.தேவராசா அன்பளிப்புக்களை வழங்கினார்.

## இடமாற்றம்

உடுவில், வியாழன்

சுன்னாகம் பட்டினசபையில் மின்சார சுப்பிரின்டனாகக் கடமையாற்றிய திரு. பி. வட்டுவங்கல ஜனவரி மாதம் தொடக்கம் எல்பிட்டியா பட்டின சபைக்கு மின்சார சுப்பிரின்டனாக மாற்றப்பட்டுள்ளார்.

## சத்தியாக்கிரகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக உறுதியளித்தனர்.

### தமிழரசுக்கட்சி மகிழ்ச்சி

சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்ட செய்தியைக் கேள்வியுற்றுத் தாங்கள் அதிகமகிழ்ச்சி அடைவதாக தமிழரசுக்கட்சிப்பிரமுகரும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக்குழுச் செயலாளருமான திரு.வி.என். நவரெத்தினம்தெரிவித்தார். சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்டாலும் ஒத்திவைக்கப்படாவிட்டாலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை தமிழர் சமுதாயத்திலிருந்து ஒழித்துக்கட்டுவதற்கு தமிழரசுக்கட்சிதொடர்ந்து உழைத்துவரும் என்று திரு.நவரத்தினம்கூறினார். சத்தியாக்கிரக இயக்கத்தை ஒத்திவைத்ததற்காக சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினருக்கும், இவ்விஷயத்தில் பெரும் முயற்சி மேற்கொண்டதற்காக அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவுக்கும் மற்றும் திருவாளர்கள் செ. ஞானபாலசிங்கம், மு. வைரமுத்து ஆகியோருக்கும் திரு.நவரத்தினம் நன்றியும் பாராட்டுதலும் தெரிவித்தார்.

## நேரு பல்கலைக்கழகம்

புதுடில்லி, நவ.15

ஜவஹர்லால் நேருவின் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கான மசோதாஒன்றை லோக்சபா ஏற்றுக்கொண்டது. இந்த மசோதா ஏற்கனவே ராஜ்ய சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய ஒற்றுமையை லட்சியமாகக்கொண்டு இந்தப் பல்கலைக் கழகம் இயங்கும்.

# சிறிமா மீதான வழக்கு தள்ளுபடி

கொழும்பு, புதன்

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மீது கோர்ட்டை அவமதித்ததாக உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு இன்று தற்காலிக பிரதமநீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ, நீதியரசர் அல்லஸ் ஆகியவர்கள்முன் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தியொன்றை வெளியிட்ட டைம்ஸ் பத்திரிகை ஸ்தாபனத்தின் மீதும், ஆசிரியர் டொமிடி' சூஸா மீதும் நீதியரசர்கள் 'நோட்டீஸ்' பிறப்பித்தனர்.

இந்த வழக்கில் திருமதி சிறிமா பண்டாரநாயகா தேர்தலின்போது நீதிமன்றத்தை அவமதிக்கும்வகையில் ஒருகூட்டத்தில் பேசியிருந்ததாகவும் அவர் மீதும் அந்தச்செய்தியைப் பிரசுரித்ததாக 'டைம்ஸ்' பத்திரிகை ஆசிரியர் மீதும் உத்தரவு பிறப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

திருமதி சிறிமா பண்டாரநாயகா மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளுக்கு போதிய சட்ட ஆதாரமில்லையென்று நீதியரசர்கள் கூறினார்கள்.

# டட்லிக்கு வயிற்றுவலி என்றார் உடுகம

## சதிவழக்கில் சாட்சியம்

கொழும்பு, புதன்

இன்று சதிமுயற்சிபற்றிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 4-வது எதிரி மேஜர் ஜெனரல் உடுகமவுக்கு எதிரான சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

முதலாவது சாட்சியான மேஜர் ஏ.சி. லெப்ரோய் தமதுசாட்சியத்தில் பெப்ரவரி 8:ம்திகதிக்குப் பின்னர் உடுகமசதி பற்றிதம்முடன் பேசியதாகக் கூறினார்.

இலங்கையில் ராணுவ புரட்சி நடத்துவது முடியாதகாரியமென்றும், கீழ்ப்பிரிவுகளைச்சேர்ந்த வீரர்களால்தான் இது சாத்தியமாகுமென்றும் உடுகம கூறியதாக சாட்சி கூறினார். இந்த விஷயத்தை வெளியில் சொல்லச் சொல்லவேண்டாம் என்று கூறியதாகஅவர் சொன்னார்.

அவசரகால நிலைமை மீதான விவாதம் பார்லிமெண்டில் நடந்தபோது பிரதமர்டட்லி சேனநாயகா பிரசன்னமாய் இல்லாதிருந்தது குறித்து அவருக்கு வயிற்றுவலி வந்துவிட்டது என்று கிண்டல் செய்ததாகவும் சாட்சி குறிப்பிட்டார்.

தேர்தலுக்குமுன்பு ராணுவத்தில் நிறைய காரியங்களை நடைபெற்றதாகவும் திரு. உடுகம பல காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டிருந்ததாகவும்ஹாலுகமுன என்ற அதிகாரியையும் தனக்கு மேல் ஒன்பது அதிகாரிகளையும் அவர் நியமித்தார் என்றும் சாட்சி கூறினார்.

## பதுளையில் 17 சடலங்கள் மீட்கப்பட்டன

### கடும் மழையால் பலத்த சேதம்

கொழும்பு, புதன்

பதுளையில் பெய்துவரும் கடும்மழை காரணமாக இப்பகுதியில் அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மழையினால் ஏற்பட்ட மண்சரிவில் பலர் மாண்டு விட்டதாகவும் இதுவரை 17 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவை பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து சேவையைச் சீராக்குவதற்கு சுமார் 3 வாரங்களாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மண்சரிவு ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய இடங்களிலிருந்து வெளியேறும்படி மக்கள் எச்சரிக்கைசெய்யப்பட்டுள்ளார்கள். சமூக சேவைப் பகுதியினர் நிவாரண வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

### மாத்தளையிலும்

மாத்தளையில் தொடர்ந்து கடும்மழை பெய்துகொண்டிருக்கிறது. இங்கு வெள்ள அபாயம் ஏற்படக்கூடியசூழ்நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளையில் ஏற்கனவே ஏற்பட்ட மண்சரிவுகளின் காரணமாகப் பலர் உயிர் துறந்துள்ளனர்.

## ஜவுளி....

1-ம்பக்கத் தொடர்ச்சி

வர்த்தக கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபன அதிகாரிகள், வர்த்தக சங்கங்களின் தலைவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரை அழைத்துள்ளார்.

வர்த்தகர்களும், தமது அபிப்பிராயங்களைத்தெரிவிக்குமாறு அமைச்சர் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமானதொடு கூட்டம் வரும் திங்கள் கிழமை கொள்ளுப்பிட்டியிலுள்ள தேயிலைதரசாரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

ஜவுளிகள் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மூன்று கப்பல்களில் ஜவுளிதினிசுகள் வந்துள்ளன.


# பெண் பிள்ளைகளுக்கு நெசவுப் பயிற்சி

பட்டு, பருத்தி நெசவுத் தொழிலில் பயிற்சி பெற விரும்பும் பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

நிபந்தனைகள்:
1. பிள்ளைகள் 14 வயதுக்கு மேற்பட்டவர்களாயும் 6-ம் வகுப்பில் சித்திபெற்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.
2. பயிற்றப்பட்டவர்கள் எமது தொழிற்சாலையில் கடமையாற்றக் கடமைப்பட்டவர்களாய் இருப்பார்கள்.

தொழிற்சாலையிலேயே தங்க விரும்பும் பிள்ளைகளுக்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

பயிற்சி பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.

(நெசவில் அனுபவமுள்ளவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்)

அதிபர்:

ஸீமா சில்க் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

பலாலி வீதி — திருநெல்வேலி யாழ்ப்பாணம்.



## காணவில்லை

53570 இலக்கம் கொண்ட எனது றலிக் சைக்கிள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் கொடுத்து ரூபா 20/- சன்மானம் பெற்றுக் கொள்ளவும். ஆ. அம்பலவாணர் C/o S. சுப்பிரமணியம் அன் கோ, 53, K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.

1165


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கோவில் மேல்வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org